யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

**J/ Hartley College, Point Pedro.**

**முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11**

**First Term Examination – 2020 – Grade 11**

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் | 61 | T | I, II | மூன்று மணித்தியாலம் Three Hours |

சுட்டெண் **Index No**

**புவியியல்**

பகுதி - I

❖ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

01. புவி மேற்பரப்பின் பரப்பளவு ……………………… மில்லியன் சதுர கிலோமீற்றர்களாகும் (510 / 520 / 410)

02. புவியின் ஓடு மற்றும் மேல் மூடியினை உள்ளடக்கிய வலயம் ……………………….. என அழைக்கப்படும் (நீர்க்கோளம் / கற்கோளம் / வளிக்கோளம்)

03. படை மண்டலத்தின் மேல் எல்லையானது கடல் மட்டத்திலிருந்து ……………………….. கிலோமீற்றர் வரை பரந்துள்ளது. (48 - 50 / 8 - 12 / 80)

04. நீரால் சூழப்பட்ட பல்லுருவ அமைப்பில் காணப்படும் சிறிய நிலப்பரப்பு ……………………….. எனப்படும் (குடா / தீவு / முனை)

05. பல்வேறு சிகரங்களையும் சாய்வுகளையும் கொண்ட உயர எழுச்சிகளுடன் கூடியதாக பரந்துள்ள நிலத்தோற்றங்கள் ……………………….. ஆகும் (தனிக்குன்று / மலைத்தொடர் / மேட்டு நிலம்)

06. நிலத்தில் காணப்படும் இறக்கங்களில் நன்னீர் நிறைந்து காணப்படும் போது ……………………….. என அழைக்கப்படுகின்றது. (கடல் / ஏரி / ஆறு)

07.ஆபரணங்கள் செய்வதற்கு ……………………….. பயன்படுகின்றது. (காரியம் / வைரம் / தொலமைற்)

08. உயர்வகை காரியம் பெறப்படும் நாடாக ……………………….. முக்கியத்துவம் பெறுகினறது. (இந்தியா / இலங்கை / பாகிஸ்தான்)

09.மண்ணின் இயல்பு, முதிர்ச்சி என்பனவற்றை தீர்மானிப்பதில் ……………………….. முக்கியத்துவம் பெறுகின்றது. (காலம் / தாய்ப்பாறை / காலநிலை)

10. கடல் கரையோரத்திலிருந்து ……………………….. கடல் மைல்களைக் கடந்து செல்லாத விதத்திற்கு மட்டுப்படுத்தட்டிருப்பது ஆள்புல கடல் எல்லை என அழைக்கப்படும். (12 / 24 / 200)

❖ **பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "ச" என்பதையும் பிழையாயின் "பி" என்பதையும் சுற்றி வட்டமிடுக.**

11. இயற்கை வளங்களில் பாறைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ( ச / பி )
12. தீப்பாறைகள் அதிவேக வீதிகளை அமைப்பதற்கு பயன்படுகின்றன ( ச / பி )
13. சிலைகள், அலங்காரப் பொருட்களின் ஆக்கத்திற்கு காரியம் பயன்படுகின்றது ( ச / பி )
14. உலகின் பாரிய காட்டுப் பிரதேசங்களில் அமேசன், கொங்கோ என்பன அயன காலநிலை வலயத்திற்குள் அடங்குகின்றன. ( ச / பி )
15. பெரியபிரிப்பு மலைத்தொடர் அவுஸ்திரேலியாக் கண்டத்தில் அமைவு பெற்றுள்ளது ( ச / பி )

❖ **"அ" நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்குக்கு ஏற்ப "ஆ" நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

16. நதிகள் உற்பத்தியாகும் இடங்கள்

| அ | ஆ |
|---|---|
| ஊற்றிலிருந்து | A - றைன் நதி |
| ஏரியிலிருந்து | B - மகாவலி நதி |
| உருகிய பனியிலிருந்து | C - தேம்ஸ் நதி |
| | D - நைல் நதி |

1. CDA 2. CAD 3. DCA 4. DAC (……….)

17. புவியின் நீர்ப்பரம்பல்

| அ | ஆ |
|---|---|
| ஏரி நீர் | A - 8% |
| மண்ணீர் | B - 1% |
| வளி மண்டல நீராவி | C - 38% |
| | D - 52% |

1. ACD 2. DAC 3. DCA 4. DBC (……….)

18. கண்டங்களில் அமைவு பெற்றுள்ள மலைத்தொடர்கள்

| அ | ஆ |
|---|---|
| வட அமெரிக்கா | A - அல்ப்ஸ் மலை |
| ஆபிரிக்கா | B - அல்டாய் மலை |
| ஐரோப்பா | C - அப்பலாச்சியன் மலை |
| | D - அற்லஸ் மலை |

1. CAD 2. CDA 3. CBD 4. BCD (……….)

19. இயற்கை வளங்கள்

| அ | ஆ |
|---|---|
| புதுப்பிக்க முடியாத வளம் | A - காற்று |

புதுப்பிக்க கூடிய வளம் B - வற்றுப் பெருக்கு
மீள் உற்பத்தி வளம் C - காடுகள்
D - பாறைகள்

1. ACD 2. DBC 3. DAC 4. ABC (……….)

20 கனியங்கள் அமைவு பெற்றுள்ள இடங்கள்

| அ | ஆ |
|---|---|
| இல்மனைற் | A - நாத்தாண்டியா |
| சிலிக்கா மணல் | B - பலாங்கொடை |
| செர்கன“ | C - தலாவ |
| | D - புல்மோட்டை |

1. DAB 2. DBA 3. ACD 4. DCA (……….)

❖ **21 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக**

21. உலக யுத்தத்தின் போது …………………………………. கைத்தொழில் முக்கிய இடம் பெற்றிருந்தது.
22. புவியின் மேற்பரப்பிலிருந்து வெளி வரும் மக்மாவால் …………………………………. பாறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
23. இலங்கையின் இயற்கை வளங்களில் …………………………………. மிக முக்கியம் வாய்ந்த வளமாகும்.
24. புவியில் ஏரிகள், கால்வாய்கள், ஆறுகள், பனிப்பிரதேசங்கள் என்பவற்றில் பரம்பியுள்ளவை …………………………………. நீர் ஆகும்.
25. சிவனொளி பாதமலை, பேதுறுதாலகால மலை, ஹோட்டன் சமவெளி ஆகியவற்றில் …………………………………. காடுகள் பரம்பியுள்ளன.
26. சூழல் மாசடைதலில் மிக குறைந்த மட்டத்தில் …………………………………. சக்தி மூலம் காணப்படுகின்றது.
27. உலகில் சனத்தொகை கூடிய நாடு …………………………………. ஆகும்.
28. இறப்பர் ஒரு காட்டுப் பயிராக …………………………………. நாட்டில் காணப்பட்டது.
29. வட அமமெரிக்காவில் உள்ள சக்கரமென்டோ ஆற்றுப்பள்ளத்தாக்கில் …………………………………. உற்பத்தி நடைபெறுகின்றது.
30. அதிக விளைச்சல் தரும் புதிய கோதுமை இனம் …………………………………. ஆகும்.

❖ **ஒவ்வொரு வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31. சமுத்திர நீர்பரப்பிலிருந்து உயர்ச்சி அடைந்துள்ள பாரிய நிலத்திணிவு
    1. கண்டங்கள் 2. தீவுகள்
    3. கழிமுகங்கள் 4. சமுத்திரங்கள் (……….)

32. புவியின் மொத்தப்பரப்பில் நிலத்தின் சதவீதம்
    1. 27% 2. 29%
    3. 71% 4. 97% (……….)

33. புவியுடன் தொடர்ச்சியான இடைத் தொடர்புகளைக் கொண்டிருக்கும் தாவரம் மற்றும் விலங்குகள் போன்ற யாவற்றையும் ஒன்றிணைக்கின்ற முழுமையான உயிர்ச்சூழலியல் தொகுதி

1. நீர்க்கோளம் 2. உயிர்க்கோளம்
3. வளிக்கோளம் 4. கற்கோளம் (……….)

34. உலகிலேயே கடல் மட்டத்திலிருந்து மிக உயரத்தில் அமைந்துள்ள மேட்டுநிலம் எது?
1. தக்கண மேட்டுநிலம் 2. அரேபியன் மேட்டுநிலம்
3. திபெத் மேட்டுநிலம் 4. மொங்கோலியா மேட்டுநிலம் (……….)

35. உலகிலேயே மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள தித்திக்கா ஏரி காணப்படும் கண்டம் எது?
1. வட அமரிக்கா 2. தென்அமெரிக்கா
3. ஆசியா 4. அவுஸ்திரேலியா (……….)

36. ஆபரணங்கள் செய்தல்
மணிக்கூடு இயந்திரபாகம் செய்தல்
அலங்காரப் பொருட்கள் செய்தல்
போன்ற பயன்களைப் பெறக்கூடிய கனியம் எது
1. காரியம் 2. இரத்தினக்கல்
3. சுண்ணக்கல் 4. சிலிக்கா (……….)

37.இலங்கையில் அமைவு பெற்றுள்ள தேசிய பூங்காக்கள் எவை?
1. ஹக்கல, யால, ரிட்டிக்கல
2. வில்பத்து, கல்ஓயா, குமண
3. வீரவில, கதிர்காமம், மின்னேரியா
4. திருகோணமடு, மின்னேரியா, கிரித்தலை (……….)

38. பின்வருவனவற்றுள் புத்தளம் மாவட்டத்தில் அமைவு பெற்றுள்ள அனல் மின் நிலையம் எது?
1. விக்டோரியா 2. சப்புகஸ்கந்த
3. நுரைச்சோலை 4. களனி திஸ்ஸ (……….)

39. இலங்கையின் பெற்றோலிய பயன்பாட்டில் 54%னை பயன்படுத்தும் துறை யாது?
1. போக்குவரத்து 2. கைத்தொழில்
3. வியாபாரம் 4. வேறுதேவைகள் (……….)

40. உலக சனத்தொகை பருமன் அடிப்படையில் சனத்தொகை கூடிய கண்டம் எது
1. ஆபிரிக்கா 2. ஐரோப்பா
3. வட அமெரிக்கா 4. ஆசியா (……….)

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

01. உமக்கு தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**(1 - 3 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை தெரிவு செய்து எழுதுக.)**

அ. 1. உமக்கு வழங்கப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தின் அளவு திட்டம் யாது?
(1:250000 / 1:50000 / 1:100000)
2. A - B யினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள நிலவுருவம் என்ன?
(குழிவுச்சாய்வு / குவிவுச்சாய்வு / சரிவுச்சாய்வு)
3. நதியின் மத்தியில் செல்லும் எல்லை வகை யாது?
( மாவட்ட எல்லை / மாகாண எல்லை / நகரசபை எல்லை)

4. H என்ற எழுத்தினால் குறித்துக்காட்டப்படும் நாற்பக்கலில் உள்ள பொது சேவை நிறுவனங்கள் இரண்டு தருக.
5. E என்ற எழுத்தினால்“ குறித்துக்காட்டப்படும் நாற்பக்கலில் காணப்படும் பெருந்தோட்டப்பயிர் யாது?
6. படப்பிரதேச்த்தின் வடகிழக்கு காற்பகுதியில் அதிகளவு பரம்பியுள்ள பயிர் வகை எது?
7. படப்பிரதேசத்தில் உள்ள வீதிகளின் பெயர்கள் இரண்டு தருக?
8. C என்ற எழுத்தினால் குறித்துக்காட்டப்படுவது எது?
9. உமக்கு வழங்கப்பட்ட இடவிளக்கப்படத்தின் பரப்பளவினைத் தருக?
10. உமக்கு வழங்கப்பட்ட இடவிளக்கப்படத்திற்கான நேர் கோட்டு அளவுத்திட்டத்தினை வரைந்து காட்டுக?

(10 x 1 = 10 புள்ளிகள்)

ஆ. உமக்கு தரப்பட்டுள்ள உலக புறவுருவப்படத்தினைக் கவனமாக அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக




**1 தொடக்கம் 5 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள மூன்று ஆங்கில எழுத்துக்களில் சரியான விடையைக் குறிக்கும் எழுத்தை உலக படத்திலிருந்து தெரிவு செய்து எழுதுக**

1. எரிமலையால் உருவான ஐஸ்லாந்து தீவு — A, B, C
2. முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட கஸ்பிஜயன் கடல் — D, E, F
3. உலகின் முகடு என அழைக்கப்படும் தக்கண மேட்டுநிலம் — G, H, I
4. ஆசியாவிற்கு வெளியில் நெல் உற்பத்தி இடம்பெறும் மடகஸ்கார் — J, K, L
5. கோதுமை உற்பத்தியில் முன்னணி வகிக்கும் சீனா — M, N, O

(5 x 1 = 5 புள்ளிகள்)

இ. 1 தொடக்கம் 5 வரையான ஒவ்வொரு வினாவின் தரப்பட்டுள்ள மூன்று ஆங்கில எழுத்துக்களில் சரியான விடையைக் குறிக்கும் எழுத்துக்களை இலங்கைப்படத்திலிருந்து தெரிவு செய்து எழுதுக




1. மிகக்குறைந்த அளவு நிலப்பரப்பில் நெற்செய்மை இடம்பெறும் நுவரெலியா மாவட்டம் A, B, C
2. இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள அகலவத்தை D, E, F
3. சிறு ஏற்றுமதி ஆராய்ச்சிநிலையம் அமைந்துள்ள மாத்தளை மாவட்டம் G, H, I
4. பறவைகளின் சரணாலயம் அமைந்துள்ள சுண்டிக்குளம் J, K, L
5. இல்மனைற் கனியம் காணப்படும் புல்மோட்டை M, N, O

02.
1. கடல்கள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
2. கண்ட மேடை கண்ட சாய்வு என்பவற்றை வரையறை செய்க?
3. அ. இலங்கையிலுள்ள மேட்டு நிலங்கள் 4 தருக?
   ஆ. மேட்டு நிலங்களின் முக்கியத்துவங்கள் 2 குறிப்பிட்டு ஒன்றினை விபரிக்குக?

03.
1. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?
2. தேயிலை பயிர்ச்செய்கையின் உற்பத்திக்கு காரணமான காரணிகள் மூன்று தருக?
3. அ. உலகின் தேயிலை உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்ற நான்கு பிரதான நாடுகளைக் குறிப்பிடுக?
   ஆ. தேயிலைப் பயிர்ச் செய்கையின் விசேட பண்புகள் மூன்று தருக?

04. 1. இயற்கை வளங்கள் என்றால் என்ன?
2. கனிய வளங்கள் வகைப்படுத்தப்பட்ட மூன்று பிரிவுகளையும் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் இவ்விரண்டு உதாரணம் தருக?
3. அ. காரிய வகைகள் மூன்றினைக் குறிப்பிடுக?
ஆ. ஒரு வளமாக காரியத்தின் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விவரிக்குக?

05. 1. மண் எவ்வாறு உருவாகின்றது என்பதனை தருக?
2. மண் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 4 தருக?
3. அ. மண்ணின் பக்கப்பார்வை என்றால் என்ன?
ஆ. மண்ணின் படையமைப்பை வரைந்து ஒவ்வொரு படைக்கும் உள்ள பண்புகளை சுருக்கமாக விபரிக்குக?

06. 1. காடுகள் என்றால் என்ன என்பதை வரையறை செய்க?
2. அயன மழைக்காடுகளின் முனைப்பான அம்சங்கள் மூன்று தருக?
3. அ. காடுகளின் முக்கியத்துவங்கள் 4 தருக?
ஆ. காடுகளும், வனஜீவராசிகளும் எதிர்நோக்கும் 2 பிரசச்சினைகளை சுருக்கமாக விவரிக்குக.

07. 1. நிலம் பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகளையும் தருக?
2. இலங்கையின் தரைத்தோற்ற வலயத்திற்குரிய சிறப்பான பண்புகளை அட்டவணைப்படுத்துக.
3. அ. இலங்கையில் நிலப்பயன்பாட்டுடன் இணைந்து காணப்படும் பிரச்சினைகள் 2 தருக?
ஆ. இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் நிலப்பாதுகாப்பு முறைகள் இரண்டினை தருக?

08. 1. இலங்கை மழையைப் பெறும் மூன்று முறைகளும் எவை?
2. அ. இலங்கையில் தரைக்கீழ் நீர் முக்கியத்துவம் பெறும் மாவட்டங்கள் 2 தருக?
ஆ. இலங்கையில் மழை குறைவான காலங்களில் நீரைப் பெற்றுக் கொள்ள உலர் வலயங்களில் அமைக்கப்பட்ட குளங்களின் பெயர்கள் 4 தருக?
3. அ. இலங்கையில் நீரைப் பயன்படுத்தும் போது எழும் பிரச்சினைகள் 4 தருக?
ஆ. நாம் நீரினால் பெறும் பயன்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விபரிக்குக?


A
B
C
D
E
H
X
Y